

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நேற்று முன்தினம் (02.10.2024) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், இராதாபுரம் ஊராட்சியில் அண்ணல் காந்தியடிகளின் 156 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



நேற்று (03.10.2024) சென்னை எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் TN Alert செயலியின் உபயோகத்தை பார்வையிட்டார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறை இயக்குநர் ப. மதுசூதன் ரெட்டி, வருவாய் நிருவாக ஆணையர் (மு.கூ.பொ.) டாக்டர் கே.எஸ்.பழனிசாமி மற்றும் சமூக பாதுகாப்புத் திட்ட இயக்குநர் க.வீ.முரளிதரன் ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. தலைமை!

# வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி சார்பில் 10,000 நபருக்கு உணவுப் பொருட்கள் - நலத்திட்ட உதவிகள்!

### உணவு - உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்குகிறார்!

சென்னை, அக். 4-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகப் பவள விழா ஆண்டு - கழக முப்பெரும் விழா 'திராவிடர் தொடர் 9' பசி தீர்ப்போம் உயிர் காப்போம்! பகலவன் வழியில் ஒளி சேர்ப்போம்!! எனும் தலைப்பில் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி சார்பில் 10,000 நபர்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (4.10.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணிக்கு, வில்லிவாக்கம், அகத்தியர் நகர் மைதானத்தில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பகுதிக் கழகச் செயலாளர்கள் கூ.பீ. ஜெயின் எம்.சி, வே.வாசு மற்றும் டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, எம். சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம. கலைச்செல்வி, ஐ.சி.எப். மு.சுரேஷ் பாபு, புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபிள்யு.அமுல், நா.அறிவுடை நம்பி, சிட்கோ சேகர், க.சுகுமாரன், மா. அகிலன், சொ.முருகேசன், ப.லோகு பாபு, ஜெ.தங்கராஜ், எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி சே.துரை ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், வே.கௌதமன் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

94 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஆர்.தீனதயாளன், 95 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.ஜானி நன்றி கூறுகின்றன

### ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! இரா.லட்சுமணன் தலைமை!

# ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### ஆர்.டி.சேகர், கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு!

சென்னை அக்.4-

சென்னை வடக்கு மாவட்டம்,ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று ( 4.10.2024 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் கேப்டன் மஹால் திருமண மண்டபம் செ81ல் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா. லட்சுமணன் தலைமை வகிக்கிறார்.ஆர்.வெற்றிவீரன்,என்.அனிபா, ஆர்.டி. ராஜா,கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மா.நாகராஜன், என். எம்.கதிரேசன், தா.வ.மு. கஜேந்திரன், நா.கோதண்டன், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, வி.வடிவேல் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி சிறப்புரை யாற்றுகிறார்.

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே. ஜே.எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள்.

நந்தனம் நம்பிராஜன், இரா.மதிவாணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன், என்.மருதுகணேஷ், டி. வி.முத்துகிருஷ்ணன், த. தமிழ்கொடி, கு.நற்குணம், வண்ணை மோகன், வெ.சு. சத்தியநாராயணன், சி. மணிகண்டன், இர.பொன் இளவரசன்,எ.ரமேஷ்பாபு, பி.சதிஷ்குமார், ப.ஆ.சண்முகம், எஸ்.கே.இளங்கோ, எம்.எம்.சாமி, பி.கே. மூர்த்தி, ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், ஆர். ரமேஷ்,வி.முத்து, கே. மோகன், டி.ஆர்.தணிகாசலம், எம்.ரூபசங்கர், சா.திருப்பதிசாமி, குமாரி நாகராஜ் எம்.சி, தேவி கதிரேசன் எம்.சி, பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, கோ. ஹரிராமன், வானூர் கே. ராஜி, எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன்,பா.கோதண்டன்,

எம்.ஹரிகிருஷ்ணன், வி.அன்பரசு, எ.சுரேஷ், கே.எம்.சேகர், ஆர்.ஜெயக்குமார், கே.குப்பன், மா. நல்லதம்பி, ப.அருண்குமார், ஜெய்(எ) ராமு, ஜே.ஜே.நெல்சன், எஸ். கிறிஸ்டிராஜ், கே.முத்தமிழ்செல்வன், இரா.மகேந்திரன், டி.லெனின், டி.கணேசன், என்.பிரேமதாசன், ஆ.பாபு, தே.ஜனார்தனன், சி.கார்த்திக், பி.செல்வராஜ், மல்லாசரவணன், ஆர். ராஜா,ஆர்.மூர்த்தி, எஸ். செந்தில்சாமி, டி.சுரேஷ் குமார், எம்.விஜயகுமார், டி. கண்ணன், பி.தமிழ்செல்வன், வி.அருள்,ஜெ.வசந்த், சி.சிவகுமார், ஜெ.மகேஷ்வரி, எம்.கலைவாணி, பாம்பே லட்சுமி, எம். ஷீலாமோகன், மற்றும் மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக முன்னாள் நிர்வாகிகள் சார்பு மன்றம் இளைஞர் அணி மன்றம் மகளிர் மன்ற நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பிஎல்சி கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளபடுகிறது. ஆர். டி.ராஜா நன்றி கூறுகிறார்.

## தி.மு.க. விவசாய அணி

# பெரம்பலூர் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

பெரம்பலூர் மாவட்ட விவசாய அணியின் துணை அமைப்பாளர்களாக ஏற்கனவே நியமிக்கப்பட்ட தியாகராஜன் மற்றும் ராஜகோபால் ஆகியோர் மறைவெய்தியதால் மூ. அன்பரசன், (107, வடக்கு தெரு, கள்ளப்பட்டி, கடம்பூர் அஞ்சல், வேப்பந்தட்டை தாலுகா, பெரம்பலூர் மாவட்டம்), சா. செல்வக்குமார், (2/133-1, பெருமாள் கோவில் தெரு, அன்னமங்கலம் அஞ்சல், வேப்பந்தட்டை தாலுகா, பெரம்பலூர் மாவட்டம்) ஆகியோர் பெரம்பலூர் மாவட்ட விவசாய அணியின் துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பெரம்பலூர் மாவட்ட விவசாய அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 03-10-2024.

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் பாதிர்வேடு ஆண்கள் மற்றும் பெண்கள், அச்சம நாயுடு கண்டிகை, தேர்வாய் ஆகிய அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 352 விலையில்லா மிதி வண்டிகளை மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் பா.செ.குணசேகரன், எஸ்.ரமேஷ், கே.வி.லோகேஷ், சராதா முத்துசாமி, மனோகரன் உதயகாந்தம்மாள், எசுரத்தினம், க.பரத்குமார், வேதச்சாலம், திருஞானம், டி.ஜெ.ஜி.தமிழரசன், சந்திரமோகன், சீ சீனிவாசன், லாரன்ஸ், மூர்த்தி, நாகராஜன், இளங்கோ, காமராஜ், வடிவேல், பழனி, கே.வி.நாகராஜ். வாசு, மெய்யழகன், லால், மனோஜ், மணிகண்டன், சதா, ஏசுராஜ், குமார், உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் ஆய்வு!

### பால் வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மேற்கொண்டார்!

சென்னை, அக்.4-

பால் வளத்துறை மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நேற்று (3.10.2024) மாலை சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் ஆய்வு மேற்கொண்டார்.

சோழிங்கநல்லூர் பால் பண்ணையானது சுமார் 32.99 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது, இந்த பால்பண்ணையில் நிரலாக்க கட்டுப்படுத்தும் முறை PLC (Programmable Logic Controller) மற்றும் மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தகவல் கையகப்படுத்துதல் SCADA (Supervisory Control And Data Acquisition) தொழிற்நுட்பத்துடன் கூடிய ஆசியாக்கண்டத்திலேயே முதல் தானியங்கி பால் பதப்படுத்தும் பண்ணையாக இயங்கி வருகிறது.

இப்பால்பண்ணையில் உள்ள பால்கொள்கலன் கொள்ளளவு 5 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது 5 இலட்சம் லிட்டர் முதல் 5.50 இலட்சம் லிட்டர் வரை பால் பதப்படுத்தப்பட்டு விற்பனைக்கு அனுப்பபட்டு வருகிறது. அதி தீவிர உயர் வெப்பநிலையுடன் கூடிய வெவ்வேறு சூழ்நிலையில் உபயோகிப்பதற்கு ஏற்றவாறு சிப்பத்துடன் கூடிய பால்பை (UHT) தயாரிக்கும், UHT பிரிவையும், பால் பண்ணையின் உற்பத்தி, குளிரூட்டும் பிரிவு, தரக்கட்டுப்பாடு, பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளையும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

இப்பால்பண்ணையில் நாளொன்றுக்கு சுமார் 5.5 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட பால் உற்பத்தி செய்யப்பட்டு தென் சென்னை பகுதிகளான அடையார், மைலாப்பூர், வேளச்சேரி, தாம்பரம், பல்லாவரம், பாலவாக்கம், செங்கல்பட்டு வரை பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பால் பண்ணையைதூய்மையாக வைக்கவும், பணியாளர்களுக்கு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

பால் வளத்துறை மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், பால்வளத்துறை இயக்குநர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.வினீத் மற்றும் ஆவின் இணை நிருவாக இயக்குநர் திருமதி. க.பொற்கொடி அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

### ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! அ.முருகன் தலைமை!

# பெரம்பூர் வடக்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - ஏ.சரவணன் பங்கேற்பு!

சென்னை, அக். 4-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதியில் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று 04:10:2024 திங்கட்கிழமை மாலை 5:00 மணி அம்மான் மஹால், முத்தமிழ் நகர், சென்னை-118 இல் நடைபெறுகிறது.

இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்எல்ஏ ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

இக்கூட்டத்தில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தொகுதி பொறுப்பாளர் ஏ.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

பகுதி செயலாளர் அ. முருகன் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் பொது உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், BLA2, BLC, கழகப் பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# விருதுநகர் தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., அறிவிப்பு

விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இரா. கோகுல் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, பா. நல்லசெல்வமணி, (125/2, ஆசிரியர் குடியிருப்பு, கே.ஆர். நகர், இராஜபாளையம் - 626108, விருதுநகர் மாவட்டம்.) அவர்கள் விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 03-10-2024.

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்
### அக்டோபர் 4 (2014)



**வாலாஜாபாத் ஒன்றியக் கழக பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றிய செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.**

**தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றிய கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


## கோயம்புத்தூர் மாநகராட்சி

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளிகோரும் அறிவிக்கை (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.(e)50/2024 நாள் : 30.09.2024

| வ.எண். | பணியின் விவரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 16,33,46,53, 67,72,73க்குட்பட்ட பணிகளுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் | 9 பணி | 16.10.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 17.10.2024 பிற்பகல் 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 641 001. தொலைபேசி எண். 0422-2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 498/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 01.10.2024